©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 219] CHENNAI, MONDAY, JULY 29, 2013
Aadi 13, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், நீலகிரி மாவட்டம்.**

**நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், குந்தா ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ2/எண் 1830/2011.)*

**No. VI(2)/146(b-1)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குந்தா ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கே. வனிதா என்பவர் குந்தா ஊராட்சியில் கட்டிட விதிகளுக்குப் புறம்பாகவும் ஊராட்சி மன்ற தீர்மானத்திற்கு எதிராக கட்டிட அனுமதி வழங்கியது மற்றும் நிர்வாக சுணக்கம் ஏற்பட்டதாலும் அரசு திட்டங்கள் மக்களுக்கு சென்றடைய தடையாக இருப்பது தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தில் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி குந்தா ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கே. வனிதா என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், குந்தா ஊராட்சி மன்றத் துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ2/எண் 1830/2011—2.)*

**No. VI(2)/146(b-2)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206 ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குந்தா ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. பி. நாராயணமூர்த்தி என்பவர் ஊராட்சி சொத்துக்களை சேதப்படுத்தியது மற்றும் நிர்வாக சுணக்கம் ஏற்படுத்தியது, மக்களுக்கு நலத்திட்டங்கள் சென்றடைய தடையாக ஊராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளிக்காமல் செயல்பட்டது தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தில் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி குந்தா ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. பி. நாராயணமூர்த்தி என்பவரை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

நீலகிரி,
**2013 ஜுலை 26.**

**அர்ச்சனா பட்நாயக்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU